பக்கங்கள் 16+4

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 30 சனிக்கிழமை 13.07.2024 அதிர்வு 348

## குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை!

காலியில் ரத்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரப்பனாதெனிய பகுதியில் நேற்று இரவு குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

04



# மேலும் ஐந்தாண்டுகள் ரணிலுக்கு வழங்குங்கள்

### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வேண்டுகோள்



நாட்டை மீட்டெடுத்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு மேலும் ஐந்தாண்டுகள் வழங்கப்பட வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீண்டு வந்துள்ளமை தொடர்பில் சர்வதேச சமூகம் மத்தியில் சிறந்த கௌரவம் காணப்படுகின்றது. எவரும் எதிர்பாராத வேகத்தில் நாம் அதைச் செய்துள்ளோம். இது பற்றி அறிய பலரும் ஆர்வமாக உள்ளனர்.

04

## ரிஷாத் எம்.பி. பயணித்த கார் விபத்து!



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் எம்.பி. பயணித்த கார் புத்தளம், கருவலகஸ்வெவ பிரதேசத்தில் வைத்து இன்று விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சைக்கிள் ஒன்று திடீரென வீதியில் பிரவேசித்தபோது ரிஷாத் பதியுதீன் எம்.பி. பயணித்த கார் சற்றே விலகமுற்பட்டுள்ளது. அவ்வேளையில் கார் வீதியை விட்டு விலகிச் சென்றதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது காரில் பயணித்த ரிஷாத் பதியுதீனுக்கு எந்தவித காயங்களும் ஏற்படாத நிலையில் சைக்கிள் செலுத்துநருக்கு மாத்திரம் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

காயமடைந்த சைக்கிளின் செலுத்துநர் புத்தளம் ஆரம்ப வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதில் கார் சிறியளவில் சேதமடைந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கருவலகஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அமிர்தலிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வு




**(எஸ்.நிதர்ஷன்)**

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று நடைபெற்றது.

பன்னாகம் கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் பன்னாகம் அண்ணா கலைமன்றம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்றலில் அமைக்கப்பட்டுள்ள அமிர்த லிங்கத்தின் திருவுருவச் சிலையின் முன்றலில் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஈகைச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டதோடு திருவுருவச் சிலைக்கு மலர் மாலையும் அணிவிக்கப்பட்டது.

நினைவேந்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக் கிளைத் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், திருமதி யசோதா சரவணபவன், வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நாகரஞ்சினி ஐங்கரன், முன்னாள் வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான ஜெயந்தன், கௌரி காந்தன், முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர் முகுந்தன், பன்னாகம் அண்ணா கலை மன்றத்தினர், பன்னாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தினர், பன்னாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
















# மாணவர்களுக்கான உதவித் தொகை வழங்கும் நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

தரம் 1 முதல் தரம் 13 வரை கல்வி கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் உதவித் தொகையை வழங்கும் யாழ். மாவட்டத்துக்கான நிகழ்வு இன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் தந்தை செல்வா மண்டபத்தில் இடம் பெற்றது.

ஜனாதிபதியால் நேற்று முதல் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தத் திட்டமானது 25 மாவட்டங்களிலும் செயற்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் இன்று 13 ஆம் திகதியும், கிளிநொச்சி மாவட்டத்தில் 14 ஆம் திகதியும் வழங்கப்படவுள்ளது.

ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைவாக ஜனாதிபதி கல்விப் புலமைப் பரிசில் திட்டத்தின் ஊடாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தெரிவாகிய மாணவர்களுக்கன புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் விருந்தினர்கள் மாணவர்களின் கலாசார நிகழ்வுகளுடன் விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதையடுத்து யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 5 கல்வி வலயங்களையும் உள்ளடக்கிய வகையில் முன்னெடுக்கப்பட்ட குறித்த உதவித் திட்டத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்ததுடன் தகுதிபெற்ற மாணவர்களுக்கான சான்றுகளையும் வழங்கிவைத்தார்.

இதேநேரம் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நேற்று முதல் ஜுலை 15 ஆம் திகதி வரையும், பதுளை, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் 13 ஆம் திகதியும் கம்பஹா மாவட்டத்தில் ஜுலை 16 மற்றும் 17 ஆம் திகதிகளிலும், காலி மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் எதிர் வரும் 15 மற்றும் 16 ஆம் திகதிகளிலும், வவுனியா, மட்டக்களப்பு, இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலும், களுத்துறை, மன்னார், அம்பாறை, குருநாகல், கண்டி மாவட்டங்களில் ஜுலை 17 ஆம் திகதியும் வழங்கப்படவுள்ளது.

மேலும், முல்லைத்தீவு, திருகோணமலை, பொலனறுவை ஆகிய மாவட்டங்களில் ஜுலை 18 ஆம் திகதியும், மொனராகலை, மாத்தறை மாவட்டங்களில் ஜுலை 19 ஆம் திகதியும், புத்தளம் மாவட்டத்தில் ஜுலை 22 ஆம் திகதியும் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உயர்தர மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 6 ஆயிரம் ரூபா வீதம், தரம் 1 முதல் 11 வரையான மாணவர்களுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும் என 24 மாதங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

மேலும், புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்காதவர்கள் மீண்டும் புலமைப்பரிசில்களைப் பெற விண்ணப்பித்து அதனைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஜனாதிபதி நிதியம் கோரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.









# மாமியாரைத் தாக்கிய மருமகள் கைது!




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், கொடிகாமத்தில் வயோதிபத் தாய் ஒருவரைத் தாக்கிய பெண் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கொடிகாமம், மந்துவில் கிழக்கு பகுதியில் உள்ள வீட்டில் வயோதிபப் பெண் ஒருவர் மீது மேற்படி பெண்ணின் மருமகளால் தாக்குதல் நடத்தப்பட்டது என்று காணாளியொன்று சமூக வலைத்தளங்களில் வைரலானது.

இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகம் கவனம் செலுத்திய நிலையில் பொலிஸாருக்குத் தகவல் அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து விசாரணைகளை ஆரம்பித்த கொடிகாமம் பொலிஸார், தாக்குதல் நடத்திய பெண்ணைக் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணைகளுக்குப் பின்னர் மேற்படி நபரை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# பஸ்ஸில் வாள்வெட்டு! இரண்டு பேர் காயம்!!

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், அரியாலைப் பகுதியில் பஸ்ஸில் பயணித்த இருவர், பஸ் சாரதி மீதும் பயணி ஒருவர் மீதும் வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் வாள்வெட்டுத் தாக்குதலில் ஈடுபட்ட இருவரும் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

ஏ - 9 வீதியில் சித்துப்பாத்தி மயானத்துக்கு முன்பாக கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸிலேயே நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைதடிப் பகுதியில் பஸ்ஸில் ஏறிய இருவர் அரியாலையில் இறங்கிய போது நடத்துநருடன் முரண்பட்டுள்ளனர். இதில் நியாயம் கேட்கச் சென்ற சாரதி மற்றும் பயணி மீதே வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**குடும்பஸ்தர்...**

ரத்கம, ரப்பனாதெனிய பகுதியில் வசிக்கும் 60 வயதுடைய நபரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவர் தேங்காய் வியாபாரி என்பதுடன் சம்பவத்தின்போது இவர் வெளிநாட்டில் உள்ள தனது இளைய சகோதரியின் பூட்டப்பட்ட வீட்டுக்குச் சென்று தேங்காய் உரித்துக்கொண்டிருக்கும் போது வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்டவரது சடலம் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள து என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும், சந்தேகநபர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

**மேலும் ஐந்தாண்டுகள்...**

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு இது நடக்குமா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டு வருகின்றது.

நாட்டை மீட்டெடுத்த தலைவர் தான் ரணில் விக்கிரமசிங்க. எனவே, நிலையானதொரு பொருளாதாரத்தை ஏற்படுத்த அவருக்கு மேலும் ஐந்தாண்டுகள் வழங்கப்பட வேண்டும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலே இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்கும். எனவே, உணர்வு அரசியலுக்குப் பதிலாக வேலைத்திட்டங்கள் உடைய அரசியலுக்கே ஆதரவு வழங்கப்பட வேண்டும்." – என்றார்.


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
JULY
27
2024
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
FM
88.9 HD3 & 105.9
INK DRIP
முரசு
DESIGN
WOLF.CA

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நீடிக்கும் வெறிப்போக்கு

இலங்கைத் தீவு பற்றிய உலகின் பார்வையைப் புரட்டிப்போட்ட அநாகரிகக் கெடு நிகழ்வான 'கறுப்பு ஜூலைக் கலவரம்' இடம்பெற்ற ஜூலை மாதத்தின் பிறிதொரு அங்கத்தில் நிற்கின்றோம்.

41 ஆண்டுகளுக்கு முன்னர் பேரின வெறிக் கொடூரம் அரங்கேறிய இந்த ஜூலை மாதம்தான் நாட்டின் எதிர்கால செல்நெறியையே தலைகீழாக மாற்றியது.

அடுத்த கால் நூற்றாண்டு காலம் முழு இலங்கை தீவையும் இரத்த வன்முறையில் ஆழ்த்திய இனப் போர்க் கொடூரங்களுக்கு விதையிட்ட வன்முறை அப்போதுதான் மோசமாக பிறப்பெடுத்தது எனலாம்.

அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், அப்போது தென்னாசியாவின் மிகப் பெரிய நூலகமாக இருந்த யாழ்ப்பாணம் பொது நூலகம் சிங்களக் காடையர்களால் எரிக்கப்பட்டு, அதனோடு முளைவிட்டிருந்த இனவாதக் காடைத்தனம் உச்சம் பெற்று வெளிப்பட்டது இந்த ஆடி கலவரத்தின் போதுதான்.

நாட்டையே புரட்டிப் போட்ட பிரளயமாக, சுமார் பத்து நாள்களில் ஊழிக் கூத்தாடி அடங்கிப் போன அந்தக் கறுப்பு ஜூலைக் கலவரத்தின் பேரழிவிலிருந்து நாடு இன்னும்தான் மீளவில்லை.

அது, இலங்கையின் அரசியல் ஆன்மாவில் ஆழமாக ஏற்படுத்திய வடு, தலைமுறை தலைமுறையாகத் தனது குரூர விளைவுகளை வெளிப்படுத்திக் கொண்டுதான் இருக்கப் போகின்றது.

அன்று பொறிக்கப்பட்ட அந்தக் கோர வடுதான் இன்றும் அமைதி, நல்லிணக்கம், சமாதானம், சகவாழ்வு, இன சௌஜன்யம் போன்ற அனைத்துக்குமே பெரும் சவாலாகத் தொடர்கின்றது.

'அரச ஆதரவுப் பயங்கரவாதம்' அரசுத் தலைமையின் ஆசீர்வாதத்தோடும், வழிகாட்டலோடும் முதன் முதலில் கட்டவிழத் தொடங்கியது இந்தஜூலைக்கொடூரத்தின் போதுதான்.

இந்தக் கலவரத்தின் விளைவாக இலங்கை தீவில் மோசமாக வெடித்த இனப் போர், 26 ஆண்டுகளுக்குப் பின்னர் அதே அரச பயங்கரவாதம் மூலம் அடக்கப்பட்டு, வெற்றி கொள்ளப்பட்டதாயினும், அந்தப் போரினால் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார பின்விளைவுகளும் பாதிப்புகளும் அளவிட முடியாதவை. அதன் அதிர்வுகள் தலைமுறைகள் கடந்தும் இந்தத் தீவை மோசமாக ஆட்டிப்படைக்கும் ஆபத்துத் தொடர்கின்றது.

அடிப்படை மனிதாபிமானத்தைத் தூக்கிக் கடாசி விட்டு, மிருகத்தனமான - காட்டுமிராண்டித்தனமான - கொடூரமான - ஒரு வெறியாட்டம் பேரினத்தவரான சிங்களவர்களின் பெயரில் கொடூரமாக அரங்கேற்றப்படத் தொடங்கியது இந்த ஜூலைக் கலவரத்தில் இருந்துதான்.

பஞ்சசீலம் பேசும் புத்தனை புனிதனாக வணங்கிக் கொண்டே, மறுபுறத்தில் பஞ்சமா பாதகம் புரிவதே அரச கொள்கைப்போக்கு என்று பிரகடனப்படுத்துவது போல ஜூலைக் கலவரம் அரசுத் தலைமையின் நேரடி பின்னணியுடன் இனவெறி சந்நதமாக முன்னெடுக்கப்பட்டது.

தூரப் பார்வையற்ற - தீர்க்க தரிசனமே இல்லாத - பொறுப்பற்ற - அற்பத்தனமான - அரசியல் முடிவுகளை எடுக்கின்ற 'கிழட்டு நரி' ஜே.ஆரின் அரசினால் அன்று முன்னெடுக்கப்பட்ட இந்த ஜூலைக் கலவர செயற்பாட்டின் வினைக்கான விளைவுகளை - பாவத்திற்கான தண்டனைகளை - இலங்கைத் தீவு இன்னம் பல தலைமுறைகளுக்குச் செலுத்த வேண்டியிருக்கும்.

அன்று முன்னெடுத்த வன்முறைகளின் நேரடிப் பௌதீகப் பாதிப்புகள் இந்த 41 ஆண்டுகளில் மாறி - ஆறி - போகலாம். ஆனால் மக்களின் நினைவுகளிலும், சமூகங்களின் மனதளவிலும் ஆன்மாவிலும், அது ஆழமாக ஏற்படுத்திய மோசமான ரணம் இலகுவில் மாறிவிடாது என்பது திண்ணம். அதுவே இன்னும் பேரின வாதிகளை பெரும் கொடூரர்களாகவும், அடக்குமுறைவாதிகளாகவும், அசுரர்களாகவும் நோக்கும் பட்டறிவை சிறுபான்மையினருக்கு இன்றளவும் தந்து நிற்கின்றது.

ஜூலைக் கலவரத்தில் அப்பட்டமாக வெளிப்படத் தொடங்கிய பேரின வாதத்தின் அந்த கொடூர முகம் - கடைத்தனம் - காட்டுமிராண்டித்தன வெறியாட்டம் - இனவெறி அணுகுமுறை - முள்ளிவாய்க்கால் வரைத் தொடர்ந்தது.

அந்தப் போக்கே இன்னும் இலங்கை தீவில் அமைதிக்கு சமாதானத்துக்கு நல்லிணக்கத்துக்கு நீங்காத் தடையாக நீடிக்கின்றது.

# மட்டக்களப்பில் தரமற்ற நெய், சத்துமா விற்ற உரிமையாளர் இருவருக்கு அபதாரம் விதிப்பு

(கனககராசா சரவணன்)

மட்டக்களப்பில் போத்தலில் அடைத்து தரமற்ற நெய் விற்பனை செய்த கம்பனி முவர் மற்றும் கர்ப்பிணி, பெண்கள் குழந்தைகளுக்காக தயாரிக் கப்பட்டு விற்பனை செய்த தரமற்ற சத் துமா கம்பனி உரிமையாளர் ஆகிய இருவரையும் 76 ஆயிரம் ரூபா தண் டப்பணம் செலுத்துமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (11) உத் தரவிட்டது.

அத்துடன் இரு பொருள்களையும் வர்த்தக நிலையங்களில் இருந்து அகற்றி அழிக்குமாறு பொது சுகாதார பரிசோதகர்களுக்குக் கட்டளையிட்டார்.

மட்டக்களப்பு வலையிறலு பிரதேசத் திலுள்ள கடை ஒன்றில் விற்பனை செய்து வந்த தரமற்ற நெய்யை கடந்த மாதம் புளியந்தீவு பிரதேச பொது சுகாதர பரிசோதகர்கள் மீட்டனர்.

அதேவேளை மட்டு கோட்டமுனை பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டு பொலித் தீனில் அடைத்து விற்பனை செய்யப்பட்டு வரும் கர்ப்பிணி தாய்மார் மற்றும் ஆறு மாத குழந்தைகளுக்கான சத்துமா தொடர்பா கிடைத்த முறைப்பாட் டுக்கு அமைய அதனை கைப்பற்றிய பொது சுகாதரா பரிசோதகர்கள் குறித்த இரண்டு பொருள்களையும் அரச இரா சாயண பகுப்பாய்வுக்கு அனுப்பி வைத்த னர்.

இதில் நெய்யில் மஞ்சல் நிறமான மற்றனிக் ஜெலோ என்ற மனித பாவ னைக்கு உதவாத தரமற்ற மஞ்சல் பதார்த்தம் கலக்கப்பட்டுள்ளதாகவும். சத்துமாவில் அல்ரோஸ் டொக்கினிக் என்ற பதார்தம் அதிகளவு கலக்கப்பட் டுள்ளதாகவும் இந்த இரு பொருள்களும் மனித பாவனைக்குத் தரமற்றவை என அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து காத்தான்குடியைச் சேர்ந்த நெய் விற்பனை முகவர் மற்றும் சத்துமா உற்பத்தி கம்பனி உரிமையாளர் இருவருக்கும் எதிராக தனிதனியாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை மட்டு. நீதிவான் நீதிமன்றத்தில் பொது சுகாதார பரிசோதகரகள் வழக்குதாக் குதல் செய்தனர்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத் துக் கொண்ட நீதிவான் நெய் விற்பனை முகவரை 50 ஆயிரம் ரூபா தண்டப்ப ணம் செலுத்துமாறும், சத்துமா உற்பத்தி உரிமையாளரை 26 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட் டார். குறித்த காலங்களில் தயாரித்து விற்பனை செய்துவரும் இரு பொருள்க ளையும் வர்த்தக நிலையங் களில் இருந்து அகற்றி அழிக்குமாறு பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்குக்கட் டளை பிறப்பித்தார்.




# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு!

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவையின் வாராந்த நிகழ்வு சந்நி தியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் முன்னிலை யில் சைவ கலை பண்பாட்டு பேரவை யின் உறுப்பினர் சிவநாதன் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பஞ்ச புராண ஓதுதலுடன் ஆரம்பான நிகழ்வில் முருகப்பெருமான் புகழ்பாடும் பண்ணிசைக் கச்சேரி இடம் பெற் றது.

இதில் அருள் விக்னேஸ்வரன் பாடல் வழங்க கீபோட்டை கலைமணி நடேசு செல்வச்சந்திரனும் மிருதங்க இசையை விரிவுரையாளர் மகேந்திரம் லோகேந் திரமும், தபேலா இசையை வித்துவான் மகேந்திரம் பிரபாவும் வழங்கினர்.

இதேவேளை,
பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான சாந்தை, பண்டத்தரிப்பை சேர்ந்த மாணவிக்கு ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபா பெறுமதியான மடிக்கணினி ஒன்று வழங்கிவைக்கப்பட்டது.







# சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலய நூலகத்துக்குப் புத்தகங்கள் அன்பளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது கோட்டத்துக்கு உட்பட்ட அல் ஹிலால் வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி சபை செயலாளரும், பொறியியலாளருமான எம்.சி.கமால் நிசாத் பாடசாலை நூலகத்திற்கு சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை கையளித்தார்.

பாடசாலை அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்வி அலுவலக பிரதான கணக்காளர் வை.ஹபிபுல்லாஹ் கலந்து கொண்டார்.






# நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்றால் நாம் இனவாதத்தைத் தோற்கடிக்க வேண்டும்

## காரைதீவில் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார

(எஸ்.அஷ்ரப்கான்)

இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்றால் நாங்கள் இனவாதத்தை தோற்கடிக்க வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்கவுக்கும் அம்பாறை மாவட்ட கரையோர வர்த்தகர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் கூட்டம் நேற்று (12) மாலை காரைதீவில் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட செயற்பாட்டாளரும் கல்முனை தொகுதி அமைப்பாளருமான ஏ. ஆதம் பாவா தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில், அம்பாறை மாவட்டத்தின் பெருமளவிலான தமிழ் பேசும் கரையோர வர்த்தக பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அத்துடன் பல வர்த்தகர்கள் இங்கு நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க முன்னிலையில் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

இங்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க உரையாற்றும் போது,

எங்களது நாடானது பொருளாதாரத்தில் ஒதுக்கப்பட்ட வீழ்ச்சி அடைந்த நாடாக இருக்கின்றது. வாங்கிய கடனைச் செலுத்த முடியாத ஒரு நாடாக நாங்கள் இருக்கிறோம். தொழில் வல்லுனர்களுக்கு இலங்கையை விட்டு வெளியேற வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டும் என்றால் நாங்கள் இனவாதத்தைத் தோற்கடிக்க வேண்டும். தேசிய ஒற்றுமையை நாங்கள் உருவாக்க வேண்டும். ஆட்சியாளர்கள் ஏன் இனவாதத்தை கொண்டு வருகிறார்கள்? எங்கள் எல்லோருக்கும் தெரியும் அவர்களுக்கு பொது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாதவிடத்து, பிள்ளைகளுக்கு தொழில் ஒன்றை வழங்க முடியாதவிடத்து, மீனவ சமூகத்தினுடைய பிரச்சினையை தீர்க்க முடியாவிட்டால் அவர்கள் இனவாதத்தை கட்டவிழ்த்து விடுவார்கள். இந்த இதனவாதத்தின் ஊடாக சிங்கள மக்களை மூளைச்சலவை செய்து சிங்கள மக்களுக்காக ஒரு அரசை உருவாக்குவோம் என்று சொல்வார்கள்.

ஆகையால் இந்த நாட்டைச் சிறப்பாகக் கட்டி எழுப்புவதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும். தேசிய ஒற்றுமையை நாங்கள் உருவாக்க வேண்டும். தேசிய ஒற்றுமையை யாருக்கு உருவாக்கலாம். சிங்கள – தமிழ் – முஸ்லிம் மக்களுக்கு ஒற்றுமை தேவை இல்லையா ? தேசிய ஒற்றுமை தேவை இல்லையா ? அதற்காகவே நாங்கள் முயற்சி செய்கிறோம். அது தேவை இல்லை என்றால் வேறு கட்சிகளை நீங்கள் தேர்ந்தெடுங்கள். வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறைய பேர் இங்கே இருக்கின்றீர்கள். நீங்கள் அனைவரும் மக்களைச் சந்திக்கிறீர்கள். கலந்துரையாடுகின்றீர்கள். நீங்கள் சொல்வதை மக்கள் கேட்பார்கள். இன்னும் இரண டரை மாதங்கள்தான் இருக்கின்றன. எல்லோரும் சேர்ந்து கதைப்போம். தெற்கைப் போன்று கிழக்கு மாகாணத்திலும் மாற்றம் உருவாக வேண்டும்.– என்றார்.


குணம்ஸ் சுப்பர்மார்க்கட்
GSM
GUNAAM SUPERMARKET
குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
Super Deal of this Week
Till July 14th
JAFFNA HOME MADE
CURRY POWDER
(ROASTED)
HOT
குடா மிளகாய் தூள்
LOWEST PRICE
12.99$
Only at GUNAAM'S SUPER MARKET
Maggi
Real Coconut Milk Powder
1kg Maggi coconut powder
LOWEST PRICE
14.99$
Only at GUNAAM'S SUPER MARKET
Niru
3 Niru Tin fish
Niru
Niru
CHINCHARD
CHINCHARD
LOWEST PRICE
10.00$
Only at GUNAAM'S SUPER MARKET
LOWEST PRICE
LB 3.99$
Only at GUNAAM'S SUPER MARKET
சூடை
LOWEST PRICE
LB 4.49$
Only at GUNAAM'S SUPER MARKET
இறால்
Gunaam's Super Market இந்த வாரம் அள்ளித்தரும் மாபெரும் அதிரடி Super Deal. அனைத்து தாயகத்துப் பழவகைகள், மீன், இறைச்சி, காய்கறி வகைகளை fresh ஆகவும் மிக மிக குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
Roasted peanut - $3.99
MD Maldive fish - $7.99
MD Nelli cordial - $5.99
MD Sherbet cordial -$5.99
நாட்டுச்சக்கரை - $3.99
Kottu mee noodles - $.89
400g uruthira dry chilli - $4.99
200g Tamarind - $1.00
திரிபோஷா - $5.99
Refresh Jack fruit - $1.99
Uruthira நல்லெண்ணெய் - $11.99
Niru Tin fish 3 for - $10.00
Niru 8lb மைசூர் பருப்பு - $7.99
குடா மிளகாய் தூள் - $12.99
Maggi coconut powder - $3.99
1kg Maggi coconut powder - $14.99
Niru Parboiled Rice - $8.99
Niru 8lb Rava - $8.99
Tiare chocolate swiss roll 4 for - $10.00
கயல் மீன் - $3.99 lb
small சீலா - 7.99 lb
Ceylon விளைமீன் - $8.99 lb
சுராப்பாரை - $7.99 lb
சூடை மீன் - $3.99 lb
இறால் - $4.49 lb
காட்டுப்பன்றp - $5.99 lb
Ceylon கொடுவா - $8.99 lb
1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998




# ஹட்டன் கணபதி யோகியின் சமாதி தின பூஜையில் அமைச்சர் ஜீவன் தொண்டமான்

(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ் )

ஹட்டன் ஸ்ரீகணபதி யோகியின் மகா சமாதி தின பூஜையில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் கலந்துக் கொண்டார்.

ஹட்டன் ரொத்தஸ் லிங்க நகர் ஸ்ரீ ராஜராஜேஸ்வரர் ஆச்சிரம ஸ்தாபகர் ஸ்ரீ கணபதி யோகியின் முதலாம் ஆண்டு மகா சமாதி தின பூஜை நிகழ்வுகள் இன்று (13) காலை அன்னார் சமாதியடைந்த ஆச்சிரமத்தில் இடம்பெற்றன.



நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் பூஜை வழிபாடுகளில் கலந்துக்கொண்டார்.

கணபதி யோகியின் பக்த அடியார்கள் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் ஆச்சிரமத்தில் அமைந்துள்ள அவரது மகா சமாதியில் விசேட பூஜைகள் இடம்பெற்றதோடு அன்னதானமும் வழங்கப்பட்டது.




# பஸ்ஸில் இருந்து இறங்கும் போது தடுக்கி வீழ்ந்த மாணவன் படுகாயம்!

(மஸ்கெலியா நிருபர்)

மேலதிக வகுப்பு சென்ற மாணவன் பஸ்ஸில் இருந்து இறங்கும் போது தடுக்கி விழுந்து படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இன்று மதியம் 2.15 மஸ்கெலியா நகரில் இருந்து அவிசாவளை நோக்கி செல்லும் பஸ் பயணத்தில் இடம்பெற்றுள்ளது.

மவுசாக்கலை தோட்டத்தில் வசிக்கும் கே.டி.தினித் என்ற பத்து வயது சிறுவனே மேலதிக வகுப்பு சென்று வீடு திரும்பும் போது மவுசாக்கலை சந்தியில் இறங்குகையில் தடுக்கி விழுந்துள்ளார்.

இந்த மாணவன் படு காயமடைந்த நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்க பட்டு மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்று மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



# நாவிதன்வெளி விளையாட்டு கழகங்களின் வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது!

## ஹரீஸ் எம்.பியின் முயற்சியால் நடவடிக்கை

**(மாளிகைக்காடு செய்தியாளர் )**

நாவிதன்வெளி பிராந்தியத்தில் நற்பிரஜைகளை உருவாக்குவதில் முதன்மையான கழகங்களாக இருந்து பிரதேச விளையாட்டு மேம்பாட்டுக்கு கணிசமான பங்களிப்பை வழங்கி வரும் விளையாட்டு கழகங்களுக்கு, விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்து கழகத்ததை வளர்ச்சி அடையச் செய்ய நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான எச்.எம்.எம். ஹரீஸின் முயற்சியால் ஜனா திபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் விளையாட்டு கழகங்களின் வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டு கடிதங்கள் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் வைத்து கழக நிர்வாகிகளிடம் கையளிக்கப்பட்டன.

அண்மைக் காலமாக எமது நாட்டில் நிலவிவரும் கடின பொருளாதார சூழ் நிலையின் காரணமாக விளையாட்டு கழகங்கள் எதிர்நோக்கிவரும் சிக்கல் நிலையை நிவர்த்திக்கும் விதத்தில்



ஜனாதிபதியிடம் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் முன்வைத்த வேண்டுகோளுக்கிணங்க இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி. கிருபைராஜா தலைமையில் இந்த ஆவணங்களை கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மேலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும், பிரதேச அமைப்பாளருமான ஏ.சி.ஏ. நஸார் ஹாஜி, நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.பி நவாஸ், நாடாளுமன்ற உறுப்பினரின் மக்கள் தொடர்பாடல் செயலாளர் நூருல் ஹுதா உமர், நாடாளுமன்ற உறுப்பினரின் நாவிதன்வெளி பிரதேச இணைப்பாளர் எம். நௌபர், நாடாளுமன்ற உறுப்பினரின் விளையாட்டு கழகங்களுக்கான இணைப்பாளர் ஏ.எம் நளீம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.






# சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலய மாணவிகள் மாகாண விளையாட்டுக்கு!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலய மாணவிகள் இம்முறை நடைபெற்ற வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் 10 வெற்றி இடங்களைத் தனதாக்கி மாகாணப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் கல்வியிலும், விளையாட்டு, கலை, இலக்கிய போட்டிகளிலும் பிரகாசிக்கும் இந்த பாடசாலை மாணவர்கள் கடந்த காலங்களில் மாகாண மற்றும் தேசிய அளவில் பிரகாசித்திருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் எம்.எப்.எம். றிபாஸ், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஏ.என்.எம்.ஆபாக் ஆகியோரது பயிற்சியின் பயனாக இந்த அடைவுகள் கிடைத்துள்ளன. அந்த மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு சிறப்பான முறையில் தயார்படுத்திய பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் இணைப் பாடவிதானத்துக்குப் பொறுப்பான உதவி அதிபர் எம்.எம். ஹாத்திம் ஆகியோர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பாக பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதாகப் பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் தெரிவித்துள்ளார்.





# இலங்கை போக்குவரத்துச் சபையின் திருகோணமலை சாலைக்குப் பந்துல!





(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் திருகோணமலை சாலைக்கு நேற்று (12) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.



# நுவரெலியாவில் இன்று கடும் மழை; மக்களது இயல்பு வாழ்க்கை பாதிப்பு!

(ஆ.ரமேஸ்)

நுவரெலியா மாவட்டத்தில் இன்று (13) வானிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக நுவரெலியா, தலவாக்கலை, நானு ஓயா, அக்கரப்பத்தனை போன்ற பிரதேசங்களில் கடும் மழை இடைவிடாது பெய்து வருகிறது.

இந்த நிலையில் இந்தப் பிரதேச மக்களின் இயல்பு வாழ்க்கையில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது.

தலவாக்கலை பிரதேசத்தில் பெய்து வரும் அதிக மழை காரணமாக மேல் கொத்மலை நீரேந்தும் பகுதியில் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.



அதேநேரத்தில் நானு ஓயா பிரதேசத்தில் மழை புகை மூட்டம் அதிகரித்ததன் காரணமாக நுவரெலியா– தலவாக்கலை நோக்கி பயணிக்கும் வாகனங்களை அவதானமாக செலுத்துமாறு நானு ஓயா பொலிஸார் வாகன சாரதிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் நுவரெலியாவில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.







# விக்கிரவாண்டி இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை; தி.மு.க. முன்னிலை: தொண்டர்கள் கொண்டாட்டம்

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை நேற்று காலை 8 மணிக்கு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இதுவரை 13 சுற்றுகள் வாக்கு எண்ணிக்கை நிறைவு பெற்றுள்ளது. 13 ஆவது சுற்றின் முடிவில் தி.மு.க. 83 ஆயிரத்து 431 வாக்குகளும், பா.ம.க. 36 ஆயிரத்து 241 வாக்குகளும், நா.த.க. 6 ஆயிரத்து 814 வாக்குகளும் பெற்றுள்ளன. நோட்டாவில் 573 வாக்குகள் பதிவாகியுள்ளது. தி.மு.க. 47 ஆயிரத்து 190 வாக்குகள் வித்தியாசத்தில் தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது.

இதனையடுத்து வாக்கு எண்ணிக்கை மையத்தைச் சுற்றியும், தொகுதியில் ஆங்காங்கேயும் தி.மு.க. தொண்டர்கள் உற்சாகக் கொண்டாட்டங்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். இனிப்புகளை வழங்கியும், பட்டாசுகள் வெடித்தும் கொண்டாட்ட மனநிலையில் தி.மு.க. தொண்டர்கள் உள்ளனர். அதேபோல், சென்னையில் தி.மு.க. தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்திலும் தி.மு.க. தொண்டர்கள் உற்சாகக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வாக்கு எண்ணிக்கை தொடங்கியவுடன் முதலில் தபால் வாக்கை எண்ணும் பணி நடந்தது. அதில், முதல்வாக்கே கையெழுத்து இல்லாததால் செல்லாத வாக்காக அறிவிக்கப்பட்டது. தபால் வாக்குகள் எண்ணிக்கையின் முடிவில், தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா 130 வாக்குகளுடன் முன்னிலை பெற்றார். பா.ம.க. வேட்பாளர் சி.அன்புமணிக்கு 10 வாக்குகள் கிடைத்துள்ளன. நாம் தமிழர் வேட்பாளர் வைத்தியர் அபிநயா 2 வாக்குகள் பெற்றார்.

இதுவரை 13 சுற்றுகள் வாக்கு எண்ணிக்கை நிறைவு பெற்றுள்ளது. 13 ஆவது சுற்றின் முடிவில் தி.மு.க. 83,431 வாக்குகளும், பா.ம.க. 36,241 வாக்குகளும், நா.த.க. 6,814 வாக்குகளும் பெற்றுள்ளது. நோட்டாவில் 573 வாக்குகள் பதிவாகியுள்ளது. தி.மு.க. 47190 வாக்குகள் வித்தியாசத்தில் தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது.

# இரு பெரும் சவால்களுக்கு மத்தியில் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் வெற்றி

## தி.மு.க. அமைப்புச் செயலாளர் தகவல்

“கள்ளக்குறிச்சி சோக சம்பவம், ஆம்ஸ்ட்ராங் கொலை என்ற இந்த இரண்டு மிகப்பெரிய சவால்களுக்கு மத்தியில், முதல்வர் ஸ்டாலினின் நேர்மையான ஆட்சியை மக்கள் ஏற்றுக் கொண்டு மகத்தான வெற்றியைக் கொடுத்துள்ளனர்.வெற்றி தேடித்தந்த விக்கிரவாண்டி தொகுதி மக்களுக்கு திமுக வாழ்நாள் முழுவதும் கடமைப்பட்டிருக்கிறது.”

– இவ்வாறு தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கூறியுள்ளார்.

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. முன்னிலைப் பெற்று வரும் நிலையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மக்களவைத் தேர்தலில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைக்கப்பட்ட இண்டியா கூட்டணி, இந்தியாவிலேயே தமிழகத்தில் நூற்றுக்கு நூறு என்ற அளவில் ஒரு மாபெரும் வெற்றியைப் பெற்றது. அந்த



தேர்தல் முடிந்து ஒருசில நாட்களுக்குள் விக்கிரவாண்டி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது.

தேர்தல் அறிவிக்கப்பட்டு, வேட்புமனு தாக்கல் அறிவிப்பு வெளியான நாளில் இருந்தே, முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான ஆட்சிக்கு, இந்தியாவில் வேறு எந்த அரசியல் கட்சிக்கும் வராத சவால்கள் எல்லாம் இந்த இடைத் தேர்தலின் போது ஏற்பட்டது. குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால், விக்கிரவாண்டி தொகுதிக்கு மிக அருகில், அப்பகுதியை ஒட்டியுள்ள கள்ளக்குறிச்சியில் ஒரு சோக சம்பவம் நடைபெற்றது.

அது மிகப்பெரிய பூதாகரமாக இந்தியாவில் இருக்கக்கூடிய மத்திய அமைச்சர்கள் முதல் உள்ளூரில் இருக்கக்கூடிய பா.ஜ.க. தலைவர்கள் ஆட்டம்போட்டு மிகப்பெரிய நாடகத்தை நடத்தினர். இந்த இடைத்தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற வேண்டும். நாற்பதுக்கு நாற்பது என்ற வெற்றியை எப்படியாவது குலைத்துவிட வேண்டும் என்று செயல்பட்டார்கள்.


அதுவும், தேர்தலுக்கு சில நாள்களுக்கு முன்பாக, சென்னையில் யாரும் எதிர்பாராமல் நடந்த ஒரு கொலைக்கு அரசியல் சாயம் பூசப்பட்டது. அதையும் இந்த தேர்தலில் அரசியலாக்க முயற்சித்தார்கள். இந்த இரண்டு மிகப்பெரிய சவால்களுக்கு மத்தியில், முதல்வர் ஸ்டாலினின் நேர்மையான ஆட்சி, 3 ஆண்டு கால ஆட்சி நடத்திய முறையை மக்கள் ஏற்றுக்கொண்டு, யார் என்ன சொன்னாலும், யார் எதிர்த்தாலும், தூற்றினாலும், நாங்கள் உங்களோடு இருக்கிறோம் என்று மக்கள் நிரூபித்துக் காட்டியுள்ளனர். இந்த மகத்தான வெற்றியைத் தேடிக் கொடுத்த விக்கிரவாண்டி தொகுதி மக்களுக்கு திமுக வாழ்நாள் முழுவதும் கடமைப்பட்டிருக்கிறது.”– என்றார்.

# ரஷ்யாவில் கருவுறுதலை அதிகரிக்க நடைமுறைக்கு வரும் புதிய திட்டம்

ரஷ்யாவில் கருவுறுதலை அதிகரிக்க பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தகவல் வெளியாகியுள்ளது.

அதன் ஒரு பகுதியாக ரஷ்யாவின் வடமேற்கு பகுதியில் உள்ள கரேலியா குடியரசு அதிகாரிகள் புதுமையான சலுகையை அறிவித்துள்ளது.

அதன்படி,25 வயதுக்குட்பட்ட உள்ளூர் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் படிக்கும் இளம் பெண்களுக்கு ஆரோக்கியமான குழந்தை பிறந்தால் அவர்களுக்கு 100,000 ரூபிள் ( இலங்கை மதிப்பில் ரூபா. 3.44 லட்சம்) பரிசு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



நாட்டில் கருவுறுதல் விகிதத்தை அதிகரிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட இந்ததிட்டம் அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவும் அதன் பிராந்தியங்களும் பிறப்பு விகிதத்தை அதிகரிக்க ஏற்கனவே பல நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

உக்ரைனுடனான சமீபத்திய போரில் ரஷ்யாவில் பல இளைஞர்கள் கொல்லப்பட்டனர், மேலும் பலர் இராணுவத்தில் கட்டாயப்படுத்தப்படுவார்கள் என்று பயந்து நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். மாஸ்கோ டைம்ஸ் கட்டுரையின்படி, நாட்டில் ஆணுறைகள் மற்றும் மாத்தி ரைகள் போன்ற கருத்தடைகளை அரசாங்கம்ஏற்கனவே தடை செய்துள்ளது.

இதற்கிடையில், கடந்த ஆண்டு டிசம்பரில், ஒவ்வொரு ரஷ்ய பெண்ணுக்கும் 8 குழந்தைகளைப் பெற்றெடுக்குமாறு புடின் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மத்திய நைஜீரியாவில் பாடசாலை கட்டடம் இடிந்து விழுந்ததில் 22 குழந்தைகள் உயிரிழப்பு

மத்திய நைஜீரியாவில் பாடசாலை கட்டடம் ஒன்று இடிந்து விழுந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த சம்பவமானது நேற்று இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய நைஜீரியாவின் ஜோஸ் மாநிலத்தில் உள்ள செயின்ட் அக்கடமி பாடசாலையிலுள்ள கட்டடம் இடிந்து விழுந்ததிலேயே 22 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

130 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என அந்த நாட்டு பொலிஸார் கூறியுள்ளனர்.

குறிப்பாக, இந்த பாடசாலையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர் எனவும் பல மாணவர்கள் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டடம் இடிந்து விழுந்தமைக்கான காரணம் தெரியவராத



போதிலும், அந்தப் பகுதியில் மூன்று நாள்களாக தொடர் மழை பெய்துள்ளதாக பிரதேசவாசிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# ரஷ்யா மாஸ்கோவில் இடம்பெற்ற விமான விபத்தில் மூவர் உயிரிழப்பு







ரஷ்யாவில் மாஸ்கோ அருகே பயணிகள் இல்லாமல் பறந்து கொண்டிருந்த ஜெட் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் விமானத்தில் இருந்த மூன்று பணியாளர்கள் உயிரிழந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

சுகோய் சூப்பர்ஜெட் 100 ரக விமானம் மாஸ்கோ பகுதியில் விழுந்து நொறுங்கியதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த விமானமானது, ரஷ்ய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இயற்கை எரிவாயு நிறுவனமான காஸ்ப்ரோம் நிறுவனத்திற்கு சொந்தமான காஸ்ப்ரோம் ஏவியாவுக்கு சொந்தமானது என தெரிய வருகின்றது.

ரஷ்ய தலைநகருக்கு தென்கிழக்கே 110 கிலோ மீற்றர் (68 மைல்) தொலைவில் உள்ள லுகோவிட்சியில் உள்ள விமானம் தயாரிக்கும் ஆலையில் இருந்து விமானம் புறப்பட்டது.

மாஸ்கோவின் நுக்கோவோ விமான நிலையத்திற்குச் சென்று கொண்டிருந்த போது விபத்துக்குள்ளாகியுள்ளது.





# அபிவிருத்திப் பெருவிழா நிகழ்வு நாவிதன்வெளியில்

**(மாளிகைக்காடு செய்தியாளர்)**

நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம். ஹரீஸின் டி- 100 திட்டத்தின் கீழ் நாவிதன்வெளி அபிவிருத்தி பெருவிழா நிகழ்வுகள் நாவிதன்வெளி அமீரலி விளையாட்டு மைதானத்தில் வெள்ளிக் கிழமை மாலை நடைபெற்றது.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப் பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மற்றும் ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக் கீடுகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட் டுள்ள டி- 100 வேலைத் திட்டத்தினூ டாக பிரதேச வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள், விளையாட்டு கழகங்கள், மைதானங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், பொது இடங்கள் என பல்வேறு இடங்கள் அபிவிருத்தி செய் யத் தேவையான பணிகள் இதன்மூலம் முடுக்கி விடப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் உயர்பீட உறுப்பினரும், பிரதேச அமைப்பாளருமான ஏ.சி. நஸார் ஹாஜியின் தலைமையில் நடைபெற்ற நாவிதன்வெளி அபிவிருத்திப் பெரு விழா நிகழ்வில் நாடாளுமன்ற உறுப் பினர் எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு மைதான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

பிரதேச வணக்க ஸ்தலங்கள், பாட சாலைகள், விளையாட்டு கழகங்கள், மைதானங்கள், சிவில் சமூக அமைப் புக்கள், பொது இடங்கள் எனப் பல்வேறு இடங்கள் அபிவிருத்தி செய்யத் தேவையான நிதியொதுக்கீட்டு ஆவ ணங்களை கையளித்தார்.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் உயர்பீட உறுப்பினருமான ஏ.ஆர்.அமீர், நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.பி. நவாஸ், நாடாளு மன்ற உறுப்பினரின் செயலாளர் நௌபர் ஏ. பாவா, இணைப்பாளர் சப்ராஸ் நிலாம், மக்கள் தொடர்பாடல் செயலாளர் நூருல் ஹுதா உமர், நாடாளுமன்ற உறுப்பினரின் நாவி தன்வெளி பிரதேச இணைப்பாளர் எம். நௌபர், நாடாளுமன்ற உறுப்பினரின் ஏனைய இணைப்பாளர்கள், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் மத்திய குழுவி னர், வட்டார அமைப்பாளர்கள், பள்ளி வாசல்களின் நிர்வாகிகள், பாடசா லைகளின் அதிபர்கள், பிரதேச முக்கி யஸ்தர்கள், விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இன வேறுபாடுகள் இல்லாது நாவிதன்வெளி பிரதேச மக்களுக்கு நன்மை அளிக்கும் விதமாக அமைந்துள்ள இந்த டி- 100 திட்டம் மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள் ளது.

# கதிர்காம பாதயாத்திரீகர்களுக்கு வாகூரவட்டையில் ஜீவ சேவை!



வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர் காமம் பாதயாத்திரையில் பயணிக்கும் காட்டுப் பாதையின் முதல் தங்குமிடமாக விளங்கும் கிணற்றடி அல்லது வாகூர வட்டை எனுமிடத்தில் பாதயாத்திரீகர் களுக்கு பழரசம், பிஸ்கட் ,தேனீர் மற்றும் வெற்றிலை பாக்கு போன்றன வழங்கி வைக்கப்பட்டன.

சமூக செயற்பாட்டாளர் கே.ஜெய சிறில் மற்றும் சமூக ஆர்வலர் வி. ரி.சகா தேவராஜா ஆகியோரின் ஒருங் கிணைப்பில் இந்த உதவி யாத்தி ரீகர்களுக்கு வழங்கப்பட்டது.

புலம்பெயர்ந்த ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த விஜயகலா சந்திரகுமார், சுவிஸ் விஜயகுமாரி மகேஸ்வரன், ஜேர்மன் நாட்டைச் காந்தன், கனடா நாட்டைச் சேர்ந்த லிங்கன், உதயன் ஆகியோரின் நிதி அனுசரணையில் இது வழங்கப்பட்டி ருக்கின்றது. தொடர்ந்து குமுக்கன் நதி தீர்த்திலும் இந்த உதவி வழங்கப்பட்டது.

பக்கங்கள் - 4

கனடா முரசு

சனிக்கிழமை 13/07/2024

## கனடாவில் மாறி வரும் சராசரி வீட்டு வாடகை

ஒன்ராரியோ, ஜுலை 13
கனடாவின் சராசரி வீட்டு வாடகைத் தொகையில் மாற்றம் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

C2▶



# ஒரே குடும்பத்தில் நால்வர் விபத்தில் ஒன்றாகச் சாவு!

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜுலை 13
பிரிட்டிஷ் கொலம்பியாவில் இடம்பெற்ற விபத்தில் நால்வர் பலியாகியுள்ளனர்.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் கெரமியோஸ் கிராமத்தின் அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இரண்டு பயணிகள் வாகனங்கள், ஒரு டிரெக்டர் டிரெய்லர் ஆகியன விபத்துக்கு உள்ளாகின எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஒரே வாகனத்தில் பயணித்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் சம்பவ இடத்தில் பலியாகியுள்ளனர்.

இதில் மற்றைய வாகனங்களில் இருந்தவர்கள் காயமடையவில்லை.

விபத்து குறித்த விசாரணைகள் தொடரும் நிலையில் விபத்துக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை.

# பிரிட்டிஷ் கொலம்பியாவில் தொடர் நில நடுக்கங்கள்!

**பிரிட்டிஷ் கொலம்பியா, ஜுலை 13**
பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் சில நில நடுக்கங்கள் பதிவாகியுள்ளன.

மாகாணத்தின் கரையோர பகுதிகளில் இவ்வாறு நிலநடுக்கங்கள் பதிவாகின எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் இந்த நில நடுக்கங்கள் காரணமாக சுனாமி அபாயம் கிடையாது என அறிவிக்கப்பட்டது.

கனடாவின் வான்கூவர் தீவிலுள்ள வுழகலைெ என்னுமிடத்தில், வியாழன் காலை 8.00 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவு கோலில் அது 6.5ஆக பதிவாகியுள்ளது.

C2▶







# மெக்சிகோவில் செய்த வைர மோதிரம் வாங்கிய கனடாப் பெண்ணுக்குக் காத்திருந்த அதிர்ச்சி!

**ஒன்ராரியோ, ஜூலை 13**

ஒன்ராரியோ மாகாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் மெக்சிகோவில் கொள்வனவு செய்த வைர மோதிரம் போலியானது எனத் தெரியவந்துள்ளது.

இந்த மோதிரத்தைக் குறித்த பெண்ணும் அவரது காதலரும் 4,176 டொலர்களுக்கு கொள்வனவு செய்துள்ளனர்.

எனினும் நாடு திரும்பியதன் பின்னர் இந்த வைர மோதிரத்தின் பெறுமதி வெறும் 50 டாலர்கள் என தெரிய வந்துள்ளது.

தாம் ஏமாற்றப்பட்டமை பெரும் வருத்தமளிப்பதாக குறித்த பெண் தெரிவித்துள்ளார்.

போலியான முறையில் மெக்சிகோவில் வைர மோதிரம் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் மெக்சிகோவின் கன்குன் பகுதிக்கு விடுமுறைக்காக இவர்கள் இருவரும் சென்றுள்ளனர்.

இதன்போது அங்கிருந்த ஆபரண கடை ஒன்றில் இந்த வைர மோதிரத்தை கொள்வனவு செய்துள்ளனர்.

நாடு திரும்பியதன் பின்னர் இந்த மோதிரத்தை பரிசோதித்து பார்த்த போது அது போலியானது என கண்டறியப்பட்டுள்ளது.

கொள்வனவு செய்யப்பட்ட மோதிரம் பற்றிய விவரங்களை மின்னஞ்சல் வழியாக அனுப்புவதாக கடை உரிமையாளர்கள் உறுதி அளித்த போதிலும் தமக்கு அந்த விவரங்கள் கிடைக்கப் பெறவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மோதிரம் றோயல் கனடா வங்கியின் வீசா அட்டை மூலம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

செலுத்திய பணத்தை திரும்பப் பெறுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை வெற்றியளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாடுகளில் ஆபரணங்கள் கொள்வனவு செய்யும் போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது சவால் மிக்கது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கனடாவிற்கு வெளியே பெறுமதியான ஆபரணங்கள் கொள்வனவு செய்வது சில ஆபத்துக்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரிட்டிஷ் கொலம்பியாவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலநடுக்கத்தின் மையம், கனடாவின் மேற்குக் கரையில், பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள வான்கூவர் தீவிலுள்ள வுழகலைெ மாவட்டத்திலிருந்து 130 மைல் தொலைவில் அமைந்துள்ளது.

சுமார் 2,000 மக்கள் வாழும் Tofinoவில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் கட்டடங்களில் அதிர்வை உணர்ந்ததாக மக்கள் தெரிவித்துள்ள

முதல் நில அதிர்வு பதிவாகி 30 நிமிடங்களில் மேலும் ஒரு நில அதிர்வு பதிவானதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த நில அதிர்வு 4.3 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது. பிரிட்டிஷ் கொலம்பியாவின் தீவுப் பகுதியில் கரையோரங்களில் சில நில அதிர்வுகள் பதிவாகியுள்ளன.

நில அதிர்வு நிலைமைகள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்படுவதாக காலநிலை ஆயத்த மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் போவின்மா தெரிவித்துள்ளார்.

கனடாவில் வருடம் ஒன்றில் ஆயிரக்கணக்கான நில அதிர்வுகள் பதிவாகின்றன எனவும் அதில் அனேகமானவை பிரிட்டிஷ் கொலம்பியாவில் பதிவாகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

அடிக்கடி நில அதிர்வு இடம் பெறும் பகுதிகளில் மக்கள் ஆயத்த நிலையில் இருப்பது உசிதமானது என அமைச்சர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

## கனடாவில் மாறி வரும்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அண்மைய மாதங்களில் வாடகைத் தொகை அதிகரிப்பு வீதத்தில் பின்னடைவு பதிவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக வருடாந்த அடிப்படையில் ஒப்பீடு செய்யும் போது வீட்டு மனை உரிமையாளர்கள் ஆரம்பத்தில் கோரும் வீட்டு வாடகைத் தொகையில் வீழ்ச்சி பதிவாகி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


Urbanation and rentals.ca ஆகியனவற்றின் வாடகை அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த மே மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது சராசரி வீட்டு வாடகை ஜூன் மாதம் 0.8 வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

கடந்த 2021ம் ஆண்டின் பின்னர் மாதாந்த அடிப்படையில் வாடகைத் தொகை அதிகளவில் வீழ்ச்சியடைந்த சந்தர்ப்பமாக கடந்த ஜூன்மாத சராசரி வாடகைத் தொகை அமைந்துள்ளது.

எவ்வாறெனினும் வருடாந்த அடிப்படையில் பார்க்கும் போது கடந்த ஜூன் மாத சராசரி வாடகை 7 வீதத்தினால் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கனடாவின் சராசரி வாடகைத் தொகையில் வீழ்ச்சி பதிவான போதிலும் சில நகரங்களில் தொடர்ச்சியாக வாடகைத் தொகை அதிகரிப்பு பதிவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




# பதினாறு வயதுச் சிறுவன் சுட்டுக்கொலை அதே வயதில் இரண்டு சிறுவர்கள் கைது!

## டொரண்டோ நகரின் மேற்கு பகுதியில் சம்பவம்

கனடாவில் 16 வயது சிறுவன் துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்தில் இரண்டு பதின்ம வயதுச் சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கனடாவின் டொரண்டோ நகரின் மேற்கு பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 16 வயது சிறுவன் பரிதாபமாக உயிரிழந்தான்.

திங்கட்கிழமை அதிகாலை 12 மணிக்கு சற்று பிறகு, King Street West மற்றும் Jameson Avenue. பகுதியில் உள்ள ஒரு அடுக்குமாடி கட்டடத்தில் இருந்து துப்பாக்கி சூட்டுச் சத்தம் கேட்கப்பட்டு காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த காவல்துறையினர் துப்பாக்கி சூட்டு காயங்களுடன் சிறுவன் ஒருவனை கண்டறிந்தனர். அவர் உயிரை பாதுகாக்கும் நோக்கி அவசர சிகிச்சைகள் வழங்கப்பட்ட போதிலும், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக வியாழக்கிழமை நடத்தப்பட்ட விசாரணையை தொடர்ந்து, 16 மற்றும் 17 வயதுடைய இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இருவரும் மீதும் இரண்டாம் நிலை கொலை குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மேலும் வியாழக்கிழமை அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

# ஆர்டிக் இறையாண்மையைப் பாதுகாப்பதற்காக கனடாவின் பங்கை நாம் ஆழப்படுத்தியுள்ளோம்

## நேட்டோ உச்சி மாநாட்டின் நிறைவில் கனேடியப் பிரதமர் செய்தி

நேட்டோ உச்சி மாநாட்டை நிறைவு செய்த கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஆர்டிக் இறையாண்மையை பாதுகாக்க கனடாவின் பங்கை ஆழப்படுத்தியுள்ளதாகப் பதிவிட்டுள்ளார்.

அமெரிக்காவின் வொஷிங்டன் டி.சியில் நடைபெற்ற நேட்டோ உச்சி மாநாட்டில் பங்கேற்ற ஜஸ்டின் ட்ரூடோ, தனது பயணத்தை இன்று நிறைவு செய்தார்.




இதுகுறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில், '75 ஆண்டுகளாக அட்லாண்டிக் கடல் கடந்த பாதுகாப்பின் மூலக்கல்லாக, நேட்டோ கூட்டணி ஜனநாயகம், அமைதி, பாதுகாப்பு மற்றும் விதிகள் அடிப்படையிலான சர்வதேச ஒழுங்கை நிலைநிறுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இன்று கூட்டணி முன்னெப்போதையும் விட வலுவாகவும், ஒற்றுமையாகவும் நிற்கிறது. கனடாவும், நேட்டோவும் காலநிலை மாற்ற அபாயம், உலகளாவிய ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு ஆகியவற்றை கூர்ந்து கவனிக்கின்றன' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேட்டோ உச்சி மாநாடு குறித்து ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்ட பதிவில், "75 ஆண்டுகளுக்கு முன்பு நேட்டோவை கண்டுபிடிக்க கனடா உதவியது. அது அன்றிலிருந்து அமைதியையும், செழிப்பையும் உருவாக்கியுள்ளது.

இந்த உச்சி மாநாட்டில், நமது பாதுகாப்பை வலுப்படுத்தவும், உக்ரைனுக்கு ஆதரவளிக்கவும், ஆர்டிக் இறையாண்மையைப் பாதுகாக்கவும், புதிய நடவடிக்கைகளுடன் கூட்டணியில் கனடாவின் பங்கை ஆழப்படுத்தினோம்" என தெரிவித்துள்ளார்.

# அரசாங்கத்தை ஏமாற்றி பண மோசடி அதிகாரி ஒருவரின் மீது குற்றச்சாட்டு



கனடாவில் அரசாங்கத்தை ஏமாற்றி பணத்தை மோசடி செய்ததாக அதிகாரி ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் ஆலோசகராக கடமையாற்றி வரும் ஒருவர் மீது இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

போலியான ஆவணங்களை பயன்படுத்தி சுமார் ஒன்றரை வருடங்கள் 250,000 டாலர்கள் இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

63 வயதான கிளாரா எலைன் விஸ்ஸார் என்ற பெண் அதிகாரி மீது இவ்வாறு குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இவர் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளார்.

அரசாங்க ஒப்பந்தங்களில் இவ்வாறு இவர் மோசடி செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

உள்ளக விசாரணைகளின் மூலம் இந்த நபர் மோசடியில் ஈடுபட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2021 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆம் திகதி வரையில் இந்த மோசடி இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# காணாமல் போன இருவர் படகில் சடலங்களாக மீட்பு

**நோவா ஸ்கோச்சியா, ஜுலை 13**

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தைச் சேர்ந்த இருவரின் உடல்கள் நோவா ஸ்கோச்சியா மாகாணா கரையோரம் மீட்கப்பட்டுள்ளன.

ஹாலிபெக்ஸ் நகரில் இருந்து தென் கிழக்கே உள்ள சாப்ல் தீவில் இந்த உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த வார ஆரம்பத்தில் இரண்டு நபர்களின் உடல்கள் அடங்கிய படகு கரை ஒதுங்கியதாக நோவா ஸ்கோச்சியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இருவரும் 70 வயது ஆண், 60 வயது பெண் என அடையாளம் காணப்பட்டனர்.

இவர்கள் இருவரும் ஜுன் 18ஆம் திகதி காணாமல் போனார்கள் என முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது..